வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் – மலர்விழி

தேதி 07.02.2025 நேரம் மாலை 6.10 மணி

---

*தலைப்புச் செய்திகள்*

ரிசர்வ் வங்கி இதர வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன் மீதான ரெப்போ வட்டி விகிதம், 6.5ல் இருந்து, 6.25 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரியில், வேளாண் துறை சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 35ஆவது காய்-கனி மற்றும் மலர்க் கண்காட்சியை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், இன்று மாலை தொடக்கி வைத்தார்.

வருகின்ற தேர்தலில், தமிழகத்திலும் என்ஆர் காங்கிரஸ் வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என்று புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

புதுச்சேரியில், கொசுத் தொல்லையை கட்டுப்படுத்துவது குறித்து, தலைமைச் செயலர் திரு. சரத் சவுகான், சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகளுடன், கலந்தாய்வுக் கூட்டம் நடத்தினார்.

---

*ரிசர்வ் வங்கி (13)*

ரிசர்வ் வங்கி இதர வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன் மீதான ரெப்போ வட்டி விகிதம், 6.5ல் இருந்து, 6.25 சதவிகிதமாக, 25 சதவிகிதப் புள்ளிகள் குறைக்கப் பட்டுள்ளது. கடந்த 5 ஆண்டுகளில், வட்டி விகிதம் குறைக்கப் படுவது, இதுவே முதல் முறையாகும். பொருளாதாரத்தை ஊக்குவிக்கும் வகையில், ரிசர்வ் பணக் கொள்கைக்

குழு, ஏகமனதாக இவ்வாறு முடிவு செய்து இருப்பதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர், திரு. சஞ்சய் மல்ஹோத்ரா, இன்று மும்பையில் செய்தியாளர்களிடம் தெரிவித்தார். பொருளாதாரத்தின் நலன்களை உறுதிப்படுத்த, ஸ்திரமான நிதி நிலையும், நுகர்வோர் பாதுகாப்பும், மிக அவசியம் என்றும், இதுவே ரிசர்வ் வங்கியின் பொறுப்பு என்றும் அவர் கூறினார். திரு. சஞ்சய் மல்ஹோத்ரா, கடந்த டிசம்பர் மாதம் ரிசர்வ் வங்கி ஆளுநராக பதவியேற்ற பின்னர் நடத்தும் முதலாவது முக்கிய செய்தியாளர் கூட்டம், இதுவாகும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

---------------------------

*வரிச் சலுகை* (11)

மத்திய பட்ஜெட்டில் அறிவிக்கப் பட்டுள்ள 1 லட்சம் கோடி ருபாய் வரிச் சலுகைகளால், பண வீக்கத்தில் பெரிய தாக்கம் எதுவும் இராது என்று, ரிசர்வ் வங்கி ஆளுநர் திரு. சஞ்சய் மல்ஹோத்ரா கூறியுள்ளார். இன்று மும்பையில் நடைபெற்ற செய்தியாளர் கூட்டத்தில், செய்தியாளர்களின் கேள்விகளுக்கு பதில் அளிக்கையில், அவர் இவ்வாறு கூறினார். நாட்டில் பல்வேறு பொருட்களுக்கான உற்பத்தித் திறன் போதிய அளவில் இருப்பதாகவும், நடப்பு திறனில் 75 சதவிகிதம் மட்டுமே பயன்பாட்டில் உள்ளதால், வரிச் சலுகைகளால் வளர்ச்சி அதிகரிக்கவே செய்யும் என்றும், அவர் தெரிவித்தார். பட்ஜெட் உத்தேசங்கள் உட்பட, எல்லா அம்சங்களையும் பரிசீலித்த பின்னரே, பணக் கொள்கைக் குழுவினர், வட்டிக் குறைப்பு முடிவை மேற்கொண்டதாக, ரிசர்வ் வங்கி ஆளுநர் மேலும் கூறினார்.

---------------------------

*கும்பமேளா (11)*

பிரயாக்ராஜில் நடைபெறும் மஹா கும்பமேளாவில், இதுவரை சுமார் 40 கோடி பக்தர்கள், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடி உள்ளனர். அமிர்த குளியல் தினங்களான மகர சங்கராந்தி, மவுனி அமாவாசை மற்றும் வசந்த பஞ்சமி முடிந்து விட்ட நிலையிலும், பக்தர்கள் உற்சாகம் குறையாமல் கூட்டம், கூட்டமாக, கும்பமேளாவிற்கு வந்த வண்ணம்

உள்ளனர். கடந்த ஜனவரி 13ஆம் தேதி தொடங்கிய மஹா கும்பமேளா, வரும் 26ஆம் தேதி வரை நடைபெறும். விழா முடிவடைய இன்னும் 19 நாட்கள் இருப்பதால், திரிவேணி சங்கமத்தில் புனித நீராடும் பக்தர்களின் எண்ணிக்கை, 50 கோடியை தாண்டும் என்றும் எதிர்பார்க்கப் படுகிறது. குடியரசுத் தலைவர் திருமதி திரௌபதி முர்மு, வரும் 10ஆம் தேதி மஹா கும்பமேளாவில் கலந்து கொண்டு, புனித நீராடக் கூடும் என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

----------------------------

*வாக்கு எண்ணிக்கை* (14)

கடந்த 5ஆம் தேதி டெல்லி சட்டமன்றத் தேர்தலில் பதிவான வாக்குகளை நாளை எண்ணி முடிக்க, எல்லா ஏற்பாடுகளும் விரிவான முறையில் செய்யப் பட்டுள்ளன. காலை 8 மணிக்கு தொடங்கும் வாக்கு எண்ணிக்கையில், தபால் வாக்குகள் முதலில் எண்ணப்பட உள்ளன. முதலாவது முடிவுகள், நாளை நண்பகல் வாக்கில் வெளியாக தொடங்கும் என எதிர்பார்க்கப் படுகிறது. டெல்லியில் 19 மையங்களில் வாக்கு எண்ணிக்கை நடைபெறும் என்றும், பயிற்சி பெற்ற சுமார் 5 ஆயிரம் பணியாளர்கள், வாக்கு எண்ணும் பணியில் ஈடுபடுத்தப் படுவார்கள் என்றும், டெல்லி தலைமைத் தேர்தல் அதிகாரி திருமதி ஆலீஸ் வாஸ் தெரிவித்தார். உத்தரபிரதேசத்தின் மில்கிபூர் சட்டமன்றத் தொகுதி, மற்றும் தமிழகத்தின் ஈரோடு கிழக்கு சட்டமன்றத் தொகுதியிலும், இடைத் தேர்தல் வாக்கு எண்ணிக்கை, நாளை நடைபெற உள்ளது. வாக்கு எண்ணிக்கை நிலவரங்கள், மற்றும், முடிவுகளை, அதிகாரப்பூர்வ இணைய தளம் மூலம் உடனுக்குடன் மக்களுக்கு அறிவிக்கவும், தேர்தல் ஆணையம் ஏற்பாடு செய்துள்ளது.

----------------------------

*எதிர்கட்சி ஆர்பாட்டம்* (9)

தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் பிடித்துச் செல்லப் படுவதை கண்டித்து, எதிர்கட்சி எம்பிக்கள் பலரும், இன்று புதுடெல்லியில் ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர். திமுகவைச் சேர்ந்த திரு. தயாநிதி மாறன்,

திரு. ஆர். ராசா, திருமதி கனிமொழி, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ஹைபி ஈடன், ராஷ்ட்ரிய ஜனதா தளத்தைச் சேர்ந்த திரு. மனோஜ் ஜா, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் திரு. சந்தோஷ் உள்ளிட்ட எம்பிக்கள், ஆர்பாட்டத்தில் பங்கேற்றனர். தமிழக மீனவர்கள் 97 பேரை, இலங்கை கடற்படையினர் கைது செய்துள்ளதாகவும், இவர்களை மீட்க வேண்டியது அவசியம் என்றும், திருமதி கனிமொழி செய்தியாளர்களிடம் பேசுகையில் கூறினார்.

---------------------------

*மலர் கண்காட்சி* (10)

புதுச்சேரியில், வேளாண் துறை சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 35ஆவது காய்-கனி மற்றும் மலர்க் கண்காட்சியை, தாவரவியல் பூங்காவில், துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், இன்று மாலை தொடக்கி வைத்தார். தொடக்க விழாவில், முதலமைச்சர் திரு. ரங்கசாமி சட்டப் பேரவைத் தலைவர் திரு. ஆர். செல்வம், வேளாண் அமைச்சர் திரு. ஜெயக்குமார் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். தொடக்க விழாவை தொடர்ந்து, கண்காட்சியை இவர்கள் சுற்றிப் பார்த்தனர். இந்த 3 நாள் கண்காட்சியில் பெங்களூர், புனே உள்ளிட்ட இடங்களில் இருந்து வரவழைக்கப்பட்ட, ஆயிரக் கணக்கிலான, பல வண்ணப் பூச்செடிகளும், மலர் அலங்கார கலைப் பொருட்களும் இடம்பெற்றுள்ளன.

---------------------------

*ரங்கசாமி* 1 (19)

2026ஆம் ஆண்டு தேர்தலில், புதுச்சேரியில் என்ஆர் காங்கிரஸ் மீண்டும் பெரிய அளவில் வெற்றி பெற்று ஆட்சியை பிடிக்கும் என்று, என்ஆர் காங்கிரஸ் நிறுவனரும், முதலமைச்சருமான திரு.ரங்கசாமி கூறியுள்ளார். இன்று புதுச்சேரியில், என்ஆர் காங்கிரஸ் கட்சியின் 15ஆம் ஆண்டு நிறுவன நாள் விழாவில் உரையாற்றிய அவர், காமராஜர் வழியை பின்பற்றவதால், என்ஆர் காங்கிரசை மக்கள் விரும்புவதாகவும், வருகின்ற தேர்தலில், தமிழகத்திலும் என்ஆர் காங்கிரஸ் வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என்றும், கூறினார்.

புதுச்சேரியில் கடந்த ஆட்சியில் செயல் படுத்தப்படாத பல திட்டங்களை, தற்போது தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு செயல்படுத்தி வருவதாகவும், கூட்டணி அரசுதான் வளர்ச்சிக்கு நல்லது என்பது அனைவருக்குமே தெரியும் என்றும், திரு. ரங்கசாமி கூறினார். சொன்னதை செய்வதே தமது அரசு என்றும், அவர் குறிப்பிட்டார்.

கிழக்கு கடற்கரை சாலையில் உள்ள என்ஆர் காங்கிரஸ் அலுவலகத்தில் நடைபெற்ற இவ்விழாவில், முன்னதாக திரு. ரங்கசாமி கட்சிக் கொடியை ஏற்றி வைத்து, காந்தி-காமராஜர் படங்களுக்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். விழாவில் கலந்து கொண்ட கட்சி நிர்வாகிகள் மற்றும் தொண்டர்களுக்கு, அவர் இனிப்பு வழங்கினார். அமைச்சர்கள் மற்றும் எம்எல்ஏக்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

*ரங்கசாமி* 2 (4)

2026ஆம் ஆண்டு தேர்தலில், பாரதீய ஜனதாவுடன் கூட்டணி தொடருமா அல்லது விஜய் கட்சியுடன் கூட்டணியா என்று, விழாவிற்கு பின்னர் செய்தியாளர்கள், திரு. ரங்கசாமியிடம் கேட்டதற்கு, அப்போதைய சூழலுக்கு ஏற்றபடி முடிவு எடுக்கப்படும் என, அவர் பதில் அளித்தார்.

---------------------------

*கொசுத் தொல்லை* 1 (10)

புதுச்சேரியில், கொசுத் தொல்லையை கட்டுப்படுத்துவது குறித்து, தலைமைச் செயலர் திரு. சரத் சவுகான், சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகளுடன், கலந்தாய்வுக் கூட்டம் நடத்தினார். துணை நிலை ஆளுநரின் அறிவுறுத்தல் மற்றும் முதலமைச்சர் வழிகாட்டுதலின்படி, இக்கூட்டம் நடைபெற்றது.

புதுச்சேரியில் ஏற்கனவே தீவிர கொசு ஒழிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும், இதன் காரணமாக தற்போது மாநிலத்தில் மலேரியா நோயாளிகள் இல்லை என்றும், சுகாதாரத் துறை அதிகாரிகள், கூட்டத்தில் தெரிவித்தனர். புதுச்சேரியில், டெங்கு காய்ச்சல் குறைந்து இருப்பதாகவும், கடந்த ஆண்டு மாநிலத்தில், டெங்கு இறப்பு

எதுவும் இருக்கவில்லை என்றும், தெரிவிக்கப் பட்டது. இது குறித்து கூடுதல் விவரங்கள்.....

(வாய்ஸ்)

கொசுத் தொல்லை 2 (18) **(வாய்ஸ்)**

புதுச்சேரியில் உள்ள கொசுக்களில், மலேரியா மற்றும் பயிலேரியா கிருமி இல்லை என்றாலும், டெங்கு கிருமி இருப்பதாக கண்டறியப் பட்டுள்ளதால், கொசு ஒழிப்புப் பணிகள் தீவிரமான முறையில் தொடர்ந்து மேற்கொள்ளப் படுகின்றன. கடந்த 4 மாதங்களில், மொத்தம் 45 ஆயிரம் வீடுகளில், அசுத்தமான நீர் தேங்கும் பொருட்கள் அகற்றப் பட்டுள்ளன. ஆரம்ப சுகாதார நிலையங்களைச் சேர்ந்த களப் பணியாளர்கள், வாய்க்கால்களில் மருந்தடித்து வருகின்றனர். கொம்யூன் பஞ்சாயத்து ஊழியர்கள், அந்தந்த பகுதிகளில் கொசு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். மலேரியா அலுவலகத்தின் மூலமாகவும், புகை மருந்து அடிக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப் படுகிறது. விசிஆர்சி நிறுவனத்துடன் இணைந்து, லாஸ்பேட்டை பகுதியில், டெங்கு தடுப்பு பணிகள் மேற்கொள்ளப் படுவதாகவும்., டீரீம்ஸ்- 24 திட்டத்தின் கீழ், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு, டெங்கு தடுப்புப் பணிகளில் பயிற்சி அளிக்கப் பட்டுள்ளதாகவும், சுகாதாரத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

வீடுகளில் உள்ள மேல்நிலை பிளாஸ்டிக் டேங்குகள் மற்றும் கீழ்நிலை தொட்டிகளை முறையாக மூடி வைத்தும், குப்பைகளை கண்ட இடங்களில் கொட்டுவதை தவிர்த்தும், கொசு உற்பத்தியை குறைப்பதில் பொது மக்கள் அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்றும் சுகாதாரத் துறை கேட்டுக் கொண்டுள்ளது.

----------------------------

*புதுச்சேரி சுப்பையா* (7)

புதுச்சேரியில், மக்கள் தலைவர் வ. சுப்பையா பிறந்த நாளான இன்று, நெல்லித்தோப்பு சந்திப்பில் உள்ள அன்னாரின் சிலைக்கு, அமைச்சர்கள் திரு லட்சுமி நாராயணன்-திரு. சாய் சரவணன் குமார், அரசுக்

கொறடா திரு. ஏகேடி ஆறுமுகம், சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் திரு. ஆர. சிவா, சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. நேரு என்கிற குப்புசாமி, திரு. பாஸ்கர் என்கிற தட்சணாமூர்த்தி, திரு. லட்சுமி காந்தன் ஆகியோர், மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

---------------------------

*காரைக்கால் (6)*

காரைக்கால் மாவட்டத்தின் புதிய ஆட்சியராக திரு. சோமசேகர் அப்பாராவ், இன்று பதவி ஏற்றுக் கொண்டார். இதனை தொடர்ந்து, காரைக்கால் மாவட்ட ஆட்சியர் பதவியில் இருந்து புதுச்சேரிக்கு மாற்றப் பட்டுள்ள டாக்டர் மணிகண்டனுக்கு, வழியனுப்பு விழாவும், காமராஜர் வளாகத்தில் நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் பதவியில் திரு. மணிகண்டனின் ஓராண்டு சாதனைகள் குறித்து, குறும்படமும் நிகழ்ச்சியில் திரையிடப்பட்டது.

---------------------------

*புதுச்சேரி பல்கலைக்கழகம் (8)*

புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் சமூகப் பணித் துறையும், பிம்ஸ் மருத்துவமனையும் இணைந்து ஏற்பாடு செய்திருந்த, மாபெரும் மருத்துவ முகாம், பல்கலைக்கழகத்தின் நூலக அலுவலகத்தில் நடைபெற்றது. துணைவேந்தர் பேராசிரியர் தரணிக்கரசு, பிம்ஸ் மருத்துவமனையின் இயக்குநரும், முதல்வருமான டாக்டர் ரேணு ஜி-பாய் வர்கீஸ் உள்ளிட்டோர் தொடக்க விழாவில் கலந்து கொண்டனர். மாணவர்கள், ஆராய்ச்சி மாணவர்கள், பேராசிரியர்கள், மற்றும், தொழிலாளர்கள் உட்பட, சுமார் 570 பேர், இம்மருத்துவ முகாமில் பங்கேற்று பயன் பெற்றனர்.

---------------------------

*டெலி மனஸ் (10)*

நாட்டின் 36 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களில் செயல்பட்டு வரும் 53 டெலி மனஸ் மையங்கள் இதுவரை, உளவியல் ஆலோசனை தொடர்பான சுமார் 18 லட்சம் தொலைபேசி அழைப்புகளை

கையாண்டு உள்ளதாக, மத்திய சுகாதாரத் துறை இணையமைச்சர் திரு. பிரதாப் ராவ் ஜாதவ், இன்று மக்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். டெலி மனஸ் சேவைகள், 20 மொழிகளில் வழங்கப் படுவதாகவும், இந்த சேவைக்கென, கடந்த 3 ஆண்டுகளில், 343 கோடி ரூபாய் செலவிடப் பட்டுள்ளதாகவும் அவர் கூறினார். நாட்டில் இதுவரை, 73 கோடிக்கும் மேற்பட்டவர்களுக்கு ஆயுஷ்மான் பாரத் சுகாதார கணக்கு எண் வழங்கப் பட்டுள்ளதாக, மற்றொரு கேள்விக்கான பதிலில் அமைச்சர் தெரிவித்தார்.

---------------------------

*விளையாட்டு* (5)

9ஆவது குளிர்கால ஆசிய விளையாட்டுப் போட்டிகள், சீனாவில் ஹார்பின் நகரில், இன்று மாலை தொடங்கி, வரும் 14ஆம் தேதி வரை நடைபெற உள்ளன. இந்தியாவில் பனி விளையாட்டுகளை ஊக்குவிக்கும் வகையில், 88 வீரர்-வீராங்கனைகள் அடங்கிய இந்தியக் குழுவினர் இப்போட்டிகளில் பங்கேற்க, மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது.

---------------------------

*சூரிய மின்சாரம்* (10)

இந்தியாவில் சூரிய சக்தி மூலமான மின்சார உற்பத்தித் திறன், 100 கிகா வாட்டாக அதிகரித்து, முக்கிய மைல் கல் எட்டப் பட்டுள்ளது. இதனால் புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறையில், உலகின் முன்னணி நாடாக இந்தியாவின் நிலை வலுப்பெற்று உள்ளதாக, புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. பசுமையான, தூய எதிர்காலத்தை உருவாக்குவதில், இந்தியாவிற்கு உள்ள உறுதிப்பாட்டிற்கு இதுவே சான்றாகும் என்றும், அமைச்சகத்தின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது. பசுமை எரிசக்தித் துறையில், இந்தியா, உலகிற்கே புதுப் பாதை காட்டி வருவதாக, புதிய மற்றும் புதுப்பிக்கவல்ல எரிசக்தித் துறை அமைச்சர் திரு. பிரல்ஹாத் ஜோஷி கூறியுள்ளார்.

---------------------------

*மர விகிதம் (5)*

கடந்த 30 ஆண்டுகளில் இந்தியாவில், மகப்பேற்றுக் கால மரண விகிதம், 83 சதவிகிதம் குறைந்து இருப்பதாக, மத்திய சுகாதார அமைச்சர் திரு. ஜே.பி நட்டா தெரிவித்துள்ளார். உலக அளவில் இது, 42 சதவிகிதமாக மட்டுமே உள்ளதாக, அவர் இன்று மக்களவையில், எழுத்து மூலமான பதில் ஒன்றில் தெரிவித்தார். இதே கால கட்டத்தில் நாட்டில், சிசு மரண விகிதமும், 69 சதவிகிதம் குறைந்துள்ளது.

---------------------------

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

ரிசர்வ் வங்கி இதர வங்கிகளுக்கு வழங்கும் குறுகிய கால கடன் மீதான ரெப்போ வட்டி விகிதம், 6.5ல் இருந்து, 6.25 சதவிகிதமாக குறைக்கப் பட்டுள்ளது.

புதுச்சேரியில், வேளாண் துறை சார்பில் ஏற்பாடு செய்யப் பட்டுள்ள, 35ஆவது காய்-கனி மற்றும் மலர்க் கண்காட்சியை, துணை நிலை ஆளுநர் திரு. கைலாஷ் நாதன், இன்று மாலை தொடக்கி வைத்தார்.

வருகின்ற தேர்தலில், தமிழகத்திலும் என்ஆர் காங்கிரஸ் வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என்று புதுச்சேரி முதலமைச்சர் திரு. ரங்கசாமி கூறியுள்ளார்.

புதுச்சேரியில், கொசுத் தொல்லையை கட்டுப்படுத்துவது குறித்து, தலைமைச் செயலர் திரு. சரத் சவுகான், சம்பந்தப்பட்ட அனைத்து துறை அதிகாரிகளுடன், கலந்தாய்வுக் கூட்டம் நடத்தினார்.